தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – சென்னை மாவட்டம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், கோயம்பேடு கிராமம், வட்டார எண்.52, நகர அளவு எண்.59 (பழைய புல எண்.34)–ல் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடம் மற்றும் கூட்ட அரங்கு கட்டுதல் – திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்குதல்.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.147 நாள் 9.9.2008

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண.244, வருவாய்த் துறை, நாள் 17.3.2006.
2. அரசு ஆணை (நிலை) எண்.76, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 28.5.2007.
3. செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–26, கடித எண்.AD1/1575/2002, நாள் 23.7.2008.

* * *

**ஆணை:**

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தற்போது நெரிசல் மிகுந்த குடியிருப்புப் பகுதியில் முறையான அடிப்படை வசதிகளின்றி மாத வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்றும் ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத் தேர்தலும், அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இடைத் தேர்தலும் நடத்தவேண்டியுள்ளது என்றும் இப்பணிகளைச் செய்வதற்கு தற்போதுள்ள வாடகைக் கட்டடத்தில் போதிய வசதிகள் இல்லை, என்பதால் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் கட்டுவது மிகவும் இன்றியமையாதது என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள, சென்னை மாவட்டம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், கோயம்பேடு கிராமம், வட்டார எண்.52, நகர அளவு எண்.59 (பழைய புல எண்.34)–ல் 50 சென்ட் நிலத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடம், கூட்ட அரங்கு கட்டவும் மற்றும் தளவாடப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் வாங்கவும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2007–2008, பகுதி–2 திட்டத்தின் கீழ், ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் முதல் தவணையாக 2007–2008 வரவு செலவுத் திட்டத்தில் ரூ.60.00 இலட்சமும், எஞ்சிய ரூ.90.00 இலட்சம், 2008–2009 வரவு செலவுத் திட்டத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. 2008–2009–ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மொத்தமாக ரூ.2.13 கோடி தேவைப்படுவதால், படிக்கப்பட்டவை இரண்டில் அனுமதிக்கப்பட்ட ரூ.1.50 கோடி அன்றி, எஞ்சிய ரூ.63.00 இலட்சம் கூடுதல் நிதிக்கு உரிய ஏற்புடன் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது.

3. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சென்னை மாவட்டம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், கோயம்பேடு கிராமம், வட்டார எண்.52, நகர அளவு எண்.59 (பழைய புல எண்.34)–ல், 50 சென்ட் நிலத்தில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்காக ரூ.2,13,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே பதிமூன்று இலட்சம் மட்டும்)–க்கு திருத்திய நிருவாக ஒப்புதல் அளித்து அரசு இவண் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

"4070–00 – ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு – 800 ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – KC. கட்டிடங்கள் கட்டுதல் – தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ளவை – 16. பெரும் பணிகள்" (து.தொ.கு. 4070 00 800 KC 1605)

5. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு சொந்த கட்டடம் கட்ட, கூடுதலாக கோரப்படும் ரூ.63,00,000/– (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) 2008–2009–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் மேற்காண் கூடுதல் செலவின விபரத்தை சட்டமன்றப் பேரவைக்குத் தெரிவிக்கும் பொருட்டு 2008–2009–ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டில் சேர்க்க ஏதுவாக, உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தப்படுகிறது.

6. 2008–2009–இன் துணை மதிப்பீடுகள் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் இச்செலவினத்தினைச் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது அரசுக்கு அனுப்பிட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலாளர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார். மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் நிதியினைப் பெற்று கட்டடப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, செலவினை மேற்கொள்ள, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இதன் பொருட்டான பயனீட்டுச் சான்றிதழை குறிப்பிட்ட காலத்திற்குள் அரசுக்கும், சென்னை மாநிலக் கணக்காயர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.55050/RD/2008, நாள் 4.9.2008–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு முதன்மைச் செயலாளர்.